## 2-வது முறையாக நீக்கப்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள்

# முதல்வரின் கனிவான கோரிக்கையை ஏற்று இன்று கூட்டத் தொடரில் பங்கேற்க அனுமதி!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!

**சென்னை, ஏப். 8-**

**சட்டப்பேரவையில் நேற்று அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலர் பதாகைகளை கொண்டு வந்து காண்பித்தனர். அவர்களை பேரவைத் தலைவர், அவைக் காவலர்களைக் கொண்டு வெளியேற்ற உத்தரவிட்டார். இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் பங்கேற்க கூடாது என்று பேரவைத் தலைவர் உத்தரவிட்டதும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அந்த உத்தரவினை நீக்கி இன்று (நேற்று) ஒரு நாள் மட்டும் பங்கேற்காமல் நீக்கி கூட்டத் தொடரில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததை ஏற்று பேரவைத் தலைவர் இன்று முதல் அவர்கள் பங்கேற்கலாம் என்று உத்தரவிட்டார்.**



இது பற்றிய விபரம் வருமாறு:-

**பேரவைத் தலைவர்:** கடந்த 28.3.2025 அன்று ஒரு பிரச்சினை குறித்து நேரமில்லா நேரத்தில் எழுப்பமுற்பட்டு, கூச்சல்குழப்பம் விளைவித்த அ.தி.மு.க. கழக உறுப்பினர்கள் மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் வெளியேற்றப்பட் டுள்ளனர். இல்லை, வெளியேற்றப்பட்டவர்கள் மட்டும். பேரவை விதி 120 ன்கீழ் ஒரு கூட்டத்தொடரில் இரண்டாவது முறையாக வெளியேறுமாறு பணிக்கப்பட்டால் அக்கூட்டத் தொடரில் நடைபெறவிருக்கும் கூட்டங்களுக்கும் வராமல் இருக்குமாறு பேரவைத் தலைவர் அவர்கள் கட்டளையிடலாம். இன்றைக்கு என்னுடைய அனுமதியை பெறாமல், ஒரு பிரச்சினையை எழுப்பி, அதில் என்னுடைய இசைவினைப் பெறாமல், அவர்கள் பதாகையை காண்பித்தார்கள்.

அவ்வாறு அவை விதிகளுக்கு மாறாக, மரபுகளுக்கு புறம்பாக நடந்து கொண்ட பதாகைகளை காண்பித்தவர்கள் இரண்டாவது முறையாக வெளியேற்ற செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு முழுவதும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக் கூடாது என்று ஆணையிடப்பட்டவர்கள்,

இதேக் கூட்டத்தொட ரில் இரண்டாவது முறையாக வெளியேற்றப்பட்டிருக்கும் காரணத்தால் பேரவை விதி 120ன்கீழ் கூட்டத்தொடர் காலத்திற்கு முழுவதும் கலந்துகொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தங்களுடைய உத்தரவிலே நான் குறுக்கிடுவதாகக் கருதக் கூடாது. நீங்கள் கூட்டத்தொடர் முழுவதும் அவர்களை நீக்கி வைக்கிறேன் என்று வழங்கியிருக்கக்கூடிய தீர்ப்பினை சிறிது மாற்றி, இறுதியாக எச்சரித்து, அவர்களை இந்தக் கூட்டத்தொடரில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வை. இரக்கத்தோடு அவர்களை அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டுமென்று சொன்னதின் அடிப்படையில், அவர்களுக்கு இந்த ஒருநாள் மட்டும், அவர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு முறை அவர்கள் நீக்கப்பட்டிருந்தாலும் எச்சரித்து அவர்களை நாளைமுதல் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம் என்று உத்தரவிடுகிறேன். அதுபோல் கண்டிப்பாக இன்று ஏதேனும் வாசகங்கள் அடங்கிய வில்லைகளாக pocketல் வைத்துக்கொண்டிருந்தாலும், நிச்சயமாக இந்த அவையில் ஒருபோதும் அவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்க மாட்டேன் என்பதையும் உறுதியாகச் சொல்கின்றேன். எல்லோருக்கும் அதே நிலைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில்

# 5000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஏப்.8-



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (07.04.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள், கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தாமோதரன், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐடிரீம் ஆர்.மூர்த்தி ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

எஸ்.தாமோதரன்: கோவை மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், பொன்மலை வேலாயுதசாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய பொன்மலை வேலாயுதசாமி திருக்கோயிலானது 700 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அத்திருக்கோயிலை மைசூர் மகாராஜா குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கட்டியதாக தெரிய வருகிறது. புரவிபாளையம் ஜமின்தார் குடும்பத்தினர் பரம்பரை அறங்காவலர்களாக இருக்கிறார்கள். இந்த திருக்கோயிலின் திருப்பணிகள் ரூ.63 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

ஏற்கனவே திருக்கோயிலின் முன்மண்டபம் ரூ.45.10 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் ஓயாமல் சரிந்து விட்ட அந்த திருக்கோயில் உடைய சுற்றுச்சுவரை கட்ட வேண்டும் என்று கவன ஈர்ப்பு தீர்மானம் கூட கொடுத்திருக்கின்றார். ரூ.2 கோடியே 31 லட்சம் செலவில் அந்த திருப்பணியும் மேற்கொள்ளப்பட இருக்கின்றது என்பதை இரண்டு உறுப்பினர்களுக்கும் சேர்த்து பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.தாமோதரன்: சுற்றுச்சுவர் வேலை முடிந்து விட்டது. இருந்தாலும் கூட சற்று குறுகலாக கட்டி விட்டார்கள். ஏற்கனவே இருந்த சுவர் இடிந்துவிட்டதால் அந்த சுவரின் மீது வைத்துக்கட்டி இருந்தால் மிக அகலமாக இருந்திருக்கும். மலைக்கோயிலாக இருப்பதனால் மேற்பகுதிகள் சற்று அகலமாக இருந்தால்தான் அங்கே சென்று வர முடியும். ஆகவே விட்டுப்போன அந்த பணியையும், சுற்று சுவரையும் செய்து கொடுக்க வேண்டும். மேலும், கோபுர வேலையெல்லாம் பாக்கியிருக்கிறது. சுமார் ரூ.50 லட்சம் மேல் செலவாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதனால் அந்த சுற்றுச்சுவருக்கும், கோபுர வேலைக்கும் நிதி ஒதுக்கி முழுமையாக அதை முடித்துக் கொடுக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை தாங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: முதல் கேள்விலேயே தெளிவாக பதிலை சொல்லி விட்டேன். ஏற்கனவே சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டது. அதன் பிறகு 2000 சதுர அடிக்கு சுற்றுச்சுவர் இருக்கின்ற பகுதியில் தலம் சரிந்து விட்டது. அதை கட்டுவதற்கு தான் நம்முடைய உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களும், நீங்களும் கேட்டிருந்தீர்கள். அதற்கு ரூ. 2 கோடி 31 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவில் அந்த பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இத்திருக்கோயிலுக்கு ரூ. 63.50 லட்சம் மதிப்பீட்டில் 7 திருப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கின்றது. அந்தப் பணிகளும் விரைவில் தொடங்கப்படும் என்று உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கனவே சொன்ன பதிலை திரும்பவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.தாமோதரன்: பொள்ளாச்சி வட்டம், நல்லிக்கூடம் பாளையத்தில் மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதற்கு அறநிலையத்துறையின் அனுமதியோடு இப்போது குடமுழுக்கு விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அது மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். அந்த கோயிலுக்கு எந்தவிதமான வருமானமும் கிடையாது. இதுவரை உபயதாரர்களை வைத்து கோயில் விழாக்கள் மற்றும் பூஜை செய்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு இருக்கிறது. அந்த கோயிலில் நிறைய திருமணங்கள் நடைபெறுகின்றன. கோயிலுக்கு அருகிலேயே ஒரு நிலம் உள்ளது. அந்த நிலத்திலே ஒரு திருமண மண்டபம் கட்டிக் கொடுத்தால் அந்த கோயில் உடைய செலவுகளை எல்லாம் நாங்கள் சரி செய்து கொள்வோம். கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட தென்முத்தூர் கிராமத்தில் உள்ள மதுரைவீரன் கோயில் ஒத்தக்கால் மண்டபத்தில் உள்ள அங்காளம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா என்பதை கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கூறிய அங்காளம்மன் திருக்கோயிலுக்கு ரூ. 24 லட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் நிறைவேற்றித் தரப்படும். அவர் கூறிய மற்றொரு கோயிலான மதுரைவீரன் கோயிலானது ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயிலாகும். கடந்த ஆட்சி காலத்தில் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதி திருக்கோயில்களின் திருப்பணி எண்ணிக்கை 1,000 திருக்கோயில் என்று இருந்ததை 1,250 திருக்கோயிலாக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு உயர்த்திருக்கின்றார். அதோடு மட்டுமல்லாமல் ஒரு லட்சம் ரூபாய் என்று இருந்த நிதியை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி, தற்போது இரண்டரை லட்சம் ரூபாயாக உயர்த்தி இருக்கின்றார். உறுப்பினர் அவர்கள் கோரிய மதுரைவீரன் கோயிலுக்கும் அந்த நிதி வழங்கப்பட்டு அதில் 70 சதவீத பணிகள் முடிவுற்றிருக்கின்றன. மீதமுள்ள 30 சதவீத பணிகள் ஒரு மாதத்திற்குள்ளாக முடிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும்.

ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதி திருக்கோயில்கள் மற்றும் கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி செய்ய வேண்டி இருந்தால் அதற்கான பட்டியலை தாருங்கள். அதையும் இணைத்துக் கொண்டு திருப்பணி செய்து தருகிறோம். இதுவரை 5,000 ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதி திருக்கோயில்கள் மற்றும் 5,000 கிராமப்புற திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலா ரூ. 106 கோடி வீதம் ரூ. 212 கோடியினை இந்த திராவிட மாடல் ஆட்சியில் வழங்கி இருக்கின்றார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐடிரீம் ஆர். மூர்த்தி : இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த அங்காள பரமேஸ்வரி கோயிலானது டிவிஷன் 49, ஆதம்சாகிப் தெருவில் அமைந்துள்ளது. அக்கோயில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஆனால் குளம் மாத்திரம் பாழ்பட்டு நிற்கின்றது. அதனை அமைச்சர் சீர் செய்து செய்து தருவாரா என்று கேட்டு அமைகிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலின் திருக்குளத் திருப்பணி நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் தலைமையில் ஒன்றிய செயலாளர் பி. ஜெ.மூர்த்தி ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றி , 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., சி.எச்.சேகர், மு.பகலவன், எம்.எல்.ரவி, கே.பி.ஜி.உமாமகேஸ்வரி, பி.வெங்கடாஜலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, ஆ.சத்தியவேலு, ஜான்பொன்னுசாமி, கே.வி.லோகேஷ், முரளிதரன், வி.பி. ரவிக்குமார், அபிராமிகுமரவேல், சித்ராமுனுசாமி, ஜெயலலிதா, தனசேகர், சுமன், டி.சங்கர், பி.என்.ரவிச்சந்திரன், சண்முகம், வெங்கடேசன், சிவசங்கர், ஜெ.சிவாஜி , டில்லி சங்கர், ஜமுனா அப்புன், ரவி, ஐ.ராஜா, உள்பட பலர் உள்ளனர்

# தேசியத் தலைவர் தளபதி

**தி**ராவிட முன்னேற்றக் கழகம் மாநிலக் கட்சி என்றாலும் அது தேவைப்படும்போது தேசிய அளவில் குரல் கொடுக்க என்றுமே தயங்கியது கிடையாது.தேசிய பிரச்சனைகளுக்கும் மாநிலப் பிரச்சனைகளுக்கு உள்ள அதே அக்கறையை தளபதி காட்ட என்றுமே தவறியதில்லை. அதற்கு உதாரணம் வக்பு வாரிய சட்ட திருத்தம். மதவாத சக்தியான பாரதிய ஜனதா முஸ்லிம்களுக்கு எதிராக கொண்டு வந்த வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் கடுமையாக விமர்சனம் செய்தது இல்லாமல் இந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து வாக்களித்தார்கள். அது போதாது என்று நாடாளுமன்றத்தில் அந்த சட்ட திருத்தம்நிறைவேறிய மறுநாளேஅந்த சட்ட திருத்தத்தை எதிர்த்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினார்.அன்றைய தினம் தளபதி உட்பட திமுக சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எல்லோரும் தங்கள் எதிர்ப்பை பதிவு செய்ய கருப்பு பேட்ஜ் அணிந்து கொண்டு சட்ட சபைக்கு வந்தார்கள். இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கு ஆதரவான குரலாக தளபதி அன்றும் இருந்தார் இன்றும்இருக்கிறார், எதிர்காலத்திலும் இருப்பார்.



திமுகவின் மொழி உணர்வு கட்சி தொடங்கிய காலத்தில் இருந்தே இருக்கிறது. தாய் மொழிக்கு தளபதியின் குரல் தாக்கம் இன்று மகாராஷ்டிராவில் எதிரொலிக்கிறது. மராத்தியில் தான் எல்லோரும் பேச வேண்டும் என்ற குரல் இப்போது அங்கே ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது.இதற்கு அவர்கள் உதாரணம் காட்டுவது தளபதியின் மொழி உணர்வைத்தான். தேசிய அளவில் அன்றும் இன்றும் திமுக பேசும் பொருள்தான். அதைத்தான் தளபதி இன்றும் சொல்கிறார்.

நிதி ஒதுக்கீடிலும் அரசு கொள்கைகளின் மீதான தங்கள் செல்வாக்கில் நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்று மதவாத பாஜக அரசுக்கு எதிராக முதலில் குரல் கொடுத்தவர் தளபதி தான். இப்போது மற்ற மாநிலங்களும் தளபதியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கின்றன. தளபதியின் தேசியப் பார்வைக்கு இது ஒரு உதாரணம். கூட்டாட்சி, பொருளாதாரம் ஏற்றத் தாழ்வு, அரசியல் அதிகாரம் ஆகியவற்றுக்கு பாஜக அரசால் ஏற்படும் அச்சுறுத்தல்களை தளபதி தேசிய அளவில் கொண்டு செல்வதால் தான் பாரதப் பிரதமர், உள்துறை அமைச்சர், நிதி அமைச்சர் உள்ளூர் பாஜக தலைவர்கள் என்று எல்லோரும் தளபதியை விமர்சனம் செய்கிறார்கள். மக்களைப் பொய் என்ற மாய வலையில் வைத்திருந்த பாஜக அரசின் பொய்களை உரக்கச் சொல்லி தேசிய அளவில் தளபதி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார் என்ற கோபம் தான் அவர்கள் செயலில் தெரிகிறது.



**எஸ். ரகுபதி**
சட்ட அமைச்சர்

மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு தொடர்பான பிரச்சனை தேசிய அளவில் கொண்டு வந்து எந்தெந்த மாநிலங்கள் பாதிக்கப்படும் என்ற ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் பாதிக்கப்படும் மாநிலங்களை ஒன்றிணைந்து மத்திய ஒன்றிய அரசை எதிர்த்து அவர்கள் குரலை ஒன்றிணைத்ததில்தளபதியின் பங்கு மகத்தானது. மறுசீரமைப்பு என்பது நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதாக இருக்க வேண்டும் என்று எல்லோரையும் ஒரே குரலில் பேச வைத்திருக்கிறார் தளபதி. அரசியல் அதிகாரம் இதன் மூலம் மத்தியில் குவியும்என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலையில் தளபதி தீவிரம் காட்கிறார். தளபதியின் குரலுக்கு பிறகு தான் மற்ற மாநிலங்களும் விழித்துக் கொண்டு குரல் தரத் தொடங்கி இருக்கின்றன. தேசிய பிரச்சனையை தேசிய அளவில் கொண்டு செல்வதில் தளபதியின் பங்கு அலாதியானது. இது மத்திய, மாநில உறவுகளை மேலும் சீர்குலைக்கும் என்பதுதான் தளபதியின் குரலாக ஒலிக்கிறது. தென் மாநிலங்களின் அதிகாரத்தை குறைத்து அரசியல் செல்வாக்கு வட மாநிலங்களை நோக்கி நகரும் என்ற விழிப்புணர்வை எல்லா மாநிலங்களுக்கும் குரலாக தளபதி பேசுகிறார் என்று அச்சம் தான் பாஜகவின் முகத்தில் தெரிகிறது.ஆனால், அது பற்றியெல்லாம் கவலைப்படாமல் தளபதி தொடர்ந்து தேசியத்திற்கான குரலாக இன்றும் ஒலிக்கிறார்.

மக்கள் தொகை அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறு வரை செய்யப்பட்டால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்படும் என்று அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து கூட்டம் கூட்டினார் தளபதி. கேரள முதல்வர், தெலுங்கானா முதல்வர், பஞ்சாப் முதல்வர், கர்நாடக துணை முதல்வர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களும் மற்ற கட்சிகளின் பிரதிநிதிகள் என25 பேர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர்.ஒடிசா முன்னாள் முதல்வர் நவீன் பட்நாயக் காணொளி மூலம் அந்த கூட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார். ஆந்திரம் முன்னாள் முதல் ஜெகன்மோகன் ஆதரவு கடிதம் அனுப்பினார்.அந்தக் கூட்டத்தில்கலந்து கொண்டவர்கள்பெயர்கள்ஆங்கிலத்திலும்அவர்கள் தாய் மொழியிலும்அவர்கள் அமர்ந்த இருக்கையில் எழுதப்பட்டிருந்தது.

அதுமட்டுமல்ல; தளபதியின் உரை ஆங்கிலத்திலும் அந்தந்த தலைவர்களின் தாய் மொழியிலும் மொழிபெயர்த்து அந்த நகல் அந்த தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. அதுமட்டுமில்ல தளபதி பேசும் போதே அவரது பேச்சை அந்தந்த தலைவர்கள் அவர்கள் தாய் மொழியில் கேட்கும் அளவுக்கு மொழிபெயர்ப்பு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்த கூட்டத்தில். இப்படி தேசிய அளவில் பாரதிய ஜனதா அரசின் அதிகார மீறலை தட்டிக் கேட்கும் குரலாக தேசிய அளவில் தளபதி பேசப்படுகிறார் என்பதால் தான் பாரதிய ஜனதா பயப்படுகிறது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலத் தலைவர்கள் மாநில உணர்வை எந்த அளவுக்கு தளபதி மதிக்கிறார் என்பதை பார்த்து வியந்து போய் பாராட்டினார்கள் தொகுதி மறு வரை செய்யும்போது மோடி எந்த மாநிலங்களும் பாதிக்க முடியாதபடி செய்ய வேண்டும் என்ற அச்ச உணர்வை பிரதமருக்கு தளபதி ஏற்படுத்தியிருக்கிறார். இப்போதைக்கு வரை அவர்கள் ஏனோ தானோ என்று அவர்கள் எண்ணப்படி செய்ய முடியாது அந்த பயம் பாஜகவின் பேச்சில் தெரிகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்பு தளபதியின் பிறந்தநாள் கூட்டத்தில் கலந்து கொண்ட காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஃபருக் அப்துல்லா தேசிய அரசியலுக்கு வர வேண்டுமென்றார்.அந்த கூட்டத்துக்கு முன்னால் நிருபர்க ளிடம் பேசிய ஃபருக் அப்துல்லா ஏன் ஸ்டாலின் பிரதமராக கூடாது. அவர் அந்த பதவிக்கு தகுதியானவர் தான் என்றார். அதே கூட்டத்தில் கலந்து கொண்ட அன்றைய பீகார்துணை முதல்வர் தேஜஸ்வியாதவ்ஸ்டாலின் தேசிய அரசியலுக்கு வர வேண்டும் என்றார்.

அந்த கூட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவும் அதே கருத்தை சொன்னார். ஆனால் இந்த தேசியத் தலைவர்களின் இந்த கருத்துக்குதளபதி அந்த பிறந்த நாள் மேடையில் பதில் சொல்லவில்லை.

மறுதினம் தனது ட்விட்டர் பக்கத்தில் ‘தேசிய அரசியலில் நான் ஏற்கனவே இருக்கிறேன்’ என்று பதில் சொன்னார்.அது தான் உண்மை.பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை முதலில் அறிவித்தது தளபதி தான். தளபதி தேசிய அளவில் எந்த பதவிக்கும் என்றுமே ஆசைப்பட்டதில்லை. அது அவர் விருப்பமும் இல்லை. அவரது குரல் தேசம் சார்ந்தது. எனவே பதவி ஆசை அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. தி.மு.க.வின் தேசிய பார்வை என்பது ஆணித்தரமானது. அதன் குரல் எல்லோருக்குமாக அன்றும் இன்றும் என்றும் ஒலிக்கும் அதை தான் தளபதி இன்றும் செய்கிறார்.

## சென்னை விமான நிலையத்தில்

# பாழடைந்த நிலையில் உள்ள உள்கட்டமைப்புகளை உடனே சரி செய்திடுவீர்!

## ஒன்றிய அமைச்சருக்கு – தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

**சென்னை,ஏப்.8-**

**“சென்னை விமான நிலையத்தில் பாழடைந்த நிலையில் உள்ள உள்கட்டமைப்புகளை உடனடியாக சரிசெய்க” என மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**

விமான நிலைய கவுன்சில் இன்டர்நேஷனல் (ACI) என்ற அமைப்பு, அதன் விமான நிலைய சேவை தரக் (ASQ) கணக்கெடுப்பில் ‘2024 ஆம் ஆண்டிற்கான பட்டியலில், தென்னிந்தியாவின் நுழைவாயிலாக அமைந்துள்ள சென்னை விமான நிலையம் உலகளவில் 56வது இடத்திலிருந்து 63வது இடத்திற்கு தரம் குறைந்துள்ளது’ என்ற தகவலை வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் எம்.பி. ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கிஞ்சரப்பு ராம் மோகன் நாயுடுவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு

ஒன்றிய அரசால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் சென்னை விமான நிலையத்தின் மோசமான உள்கட்டமைப்பு வசதிகளை விமான நிலைய கவுன்சில் இன்டர்நேஷனல் (ACI) சுட்டிக்காட்டி உள்ளது. அதனை தொடர்ந்து, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்

நாட்டிலேயே மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றாகவும், தென்னிந்தியாவின் நுழைவாயிலாகவும் திகழும் சென்னை விமான நிலையம், உலகளவில் 56வது இடத்திலிருந்து 63வது இடத்திற்கு சரிந்துள்ளது. பெங்களூரு மற்றும் மங்களூருவில் உள்ள தனியார் விமான நிலையங்கள் உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ள நிலையில், மும்பை மற்றும் டெல்லி விமான நிலையங்கள் அதிக பயணிகள் நடமாட்டம் உள்ள மையங்களில் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றன. ஆனால், இந்திய விமான நிலைய ஆணையத்தால் நிர்வகிக்கப்படும் சென்னை விமான நிலையம் உள்கட்டமைப்பு மற்றும் பயணிகள் சேவை தரத்தில் கணிசமாக பின்தங்கியுள்ளது. அடிக்கடி பயணம் செய்யும் பயணிகளிடமிருந்து கிடைத்த கருத்துக்களின் அடிப்படையில், தொடர்ந்து நிலவும் இன்னல்கள் என்னவென்றால்



நெரிசலான ஓய்வறைகள் மற்றும் தூங்கும் அறைகள், அசுத்தமான கழிவறைகளால், சுத்தத்தின் தர அளவு 2023 இல் 4.90 ஆக இருந்து 2024 இல் 4.71 ஆக சரிந்துள்ளது. மிகக் குறைந்த மதிப்பீடு (4.64) கொண்ட தரமற்ற உணவு வசதிகள், போதுமான வரவேற்பு வசதிகள் இல்லாமை, தெளிவற்ற திசைக் குறியீடுகள், தரமற்ற வைஃபை (WiFi) வசதி, உள்ளூர் சிம் கார்டு இல்லாத வெளிநாட்டு பயணிகளுக்கு OTP பெறுவதில் சிரமம், விமான நிலையத்திலிருந்து வரும் பயணிகளுக்கு உரிய வழிகாட்டுதல்கள் இல்லாததால் வாகனங்களை அணுகுவதில் சிக்கல்,

கடந்த ஆண்டு ஒருங்கிணைந்த முனையம் தொடங்கப்பட்டது ஒரு முன்னேற்றமாக இருந்தாலும், விமான நிலையம் தொடர்ந்து மோசமான உள்கட்டமைப்பு மற்றும் சேவை வழங்கல்களால் பாதிக்கப்பட்டு வருகிறது. பெரு நகரமாகவும், சர்வதேச அளவில் முக்கிய நகரமாவும் வளர்ந்து வரும் சென்னையின் பொருளாதார மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் விமான நிலையம் அமைக்கப்படவில்லை.

உடனடியாக நிலுவையில் உள்ள மேம்பாடுகளை விரைவுபடுத்த இந்திய விமான நிலைய ஆணையத்திற்கு (AAI) ஒன்றிய அமைச்சகம் உத்தரவிட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

சென்னை விமான நிலையத்தின் தற்போதைய நிலை நம் சர்வதேச புகழை குறைப்பது மட்டுமல்லாமல், ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளுக்கு மோசமான அனுபவத்தையும் தந்துவருகிறது.

சென்னைக்கு உரிய உலகத்தரம் வாய்ந்த விமான நிலைய உள்கட்டமைப்பு கிடைப்பதை உறுதி செய்ய உங்களது உடனடி நடவடிக்கைகளை நாங்கள் எதிர்பார்க்கிறோம்

இந்தப் பிரச்சனையை கவனத்தில் கொண்டு சென்னை விமான நிலையத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், பயணிகளின் வசதிகளில் தொடர்ந்து ஏற்படும் சிக்கல்களை சரிசெய்யவும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள துறை சார்ந்த அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் தயாநிதி மாறன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.